செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 184 நாள் : 1/4/17

## வேலூர் மாவட்டத்தில் இதுவரை மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெறாத நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம்

### வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ. ராமன், இ.ஆ.ப., அவர்களின் அறிவிப்பு

தமிழக அரசின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் இதுவரை மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெறாத நபர்களுக்கு வேலூர் மாவட்டத்தில் வட்டார அளவில் 14.03.2017 முதல் 16.05.2017 வரை சிறப்பு முகாம் நடத்தி, நடத்தப்பட்ட நாளிலேயே, உதவி புத்தகம் மற்றும் மருத்துவ சான்றினை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கிட உடனடி நடவடிக்கை மேற்கொண்டிட அறிவுறுத்தப்படுகிறது என வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெறாத மாற்றுத்திறனாளிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் ஏப்ரல் 2017ல் நடைபெறவுள்ள முகாம்களுக்கு நேரில் வந்து மருத்துவ பரிசோதனை செய்து, தேசிய அடையாள அட்டை பெற்று பயனடையுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

| வ.எண் | வட்டாரம் | நாள் | முகாம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | காவேரிபாக்கம் | 04.04.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், காவேரிபாக்கம் |
| 2. | அரக்கோணம் | 07.04.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அரக்கோணம் |
| 3. | நெமிலி | 11.04.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நெமிலி |
| 4. | வாலாஜா | 13.04.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வாலாஜா |
| 5. | காட்பாடி | 18.04.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சோளிங்கர் |
| 6. | சோளிங்கர் | 21.04.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், காட்பாடி |
| 7. | கே.வி.குப்பம் | 25.04.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கே.வி.குப்பம் |
| 8. | திருப்பத்தூர் | 28.04.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பத்தூர் |

மேலும் இம்முகாம்களுக்கு வரும் மாற்றுத்திறனாளிகள் ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல் மற்றும் புகைப்படம் - 2, ஆகியவற்றை நேரில் சமர்ப்பித்து, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையினை பெறலாம்.

இவ்வாறு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

1.4.2017
செ.ம.தொ.அ.
வேலூர்– 9.